BSNL ஊழியர் சங்கம்

தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:175 **தேதி:-08.10.2014**

நவம்பர் 27ல் ஒரு நாள் வேலை நிறுத்தம்-JAC முடிவு

அன்பார்ந்த தோழர்களே,

07.10.2014 அன்று புதுடெல்லியில் JACயின் தலைவர் தோழர் C.சந்தேஸ்வர் சிங் தலைமையில் JAC கூடியது. JACயின் அமைப்பாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் அனைவரையும் வரவேற்றதுடன் விவாதத்தை துவக்கி வைத்தார். 23.09.2014 அன்று நடைபெற்ற தர்ணா போராட்டத்தையும், 30.09.2014 அன்று நடைபெற்ற இரண்டு மணி நேர வெளிநடப்பு வேலை நிறுத்தத்தையும் இந்த கூட்டம் பரிசீலித்து, அவற்றை வெற்றிகரமாக்கிய அனைத்து ஊழியர்களையும், தலைவர்களையும் பாராட்டியது. ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை தீர்த்து வைப்பதில் நிர்வாகத்தின் பிடிவாதமான எதிர்மறை நிலைபாட்டிற்கு தனது அதிருப்தியை தெரிவித்தது.

நமது 30 அம்ச கோரிக்கைகளை வென்றடைய 27.11.2014 அன்று ஒரு நாள் வேலை நிறுத்தத்தை நடத்திட JAC முடிவெடுத்தது. 08.10.2014 அன்று வேலை நிறுத்த அறிவிப்பு CMDயிடம் வழங்கப்படும்.

ஒன்று பட்ட போராட்டமே நமது பிரச்சனைகளை தீர்த்து வைக்கும். எனவே நமது வேலை நிறுத்த போராட்டத்திற்கு தயாராவோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

S.செல்லப்பா
மாநில செயலாளர்